**கவனிக்க.-** (i) *2023.02.03 ஆந் திகதிய 2318 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

(ii) *இந்த வர்த்தமானியின் பகுதி* VI *இல் 2023 ஆம் ஆண்டுக்கான காலி மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2319 - 2023 පෙබරවාරි මස 10 වැනි සිකුරාදා - 2023.02.10

*2319 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - | நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| முன்னறிவித்தல்கள் | - | மேல் மாகாணம் | - |
| இறுதிக் கட்டளைகள் | - | மத்திய மாகாணம் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - | தென் மாகாணம் | - |
| மேல் மாகாணம் | - | வட மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - | கிழக்கு மாகாணம் | - |
| தென் மாகாணம் | - | வடமேல் மாகாணம் | - |
| வட மாகாணம் | - | வடமத்திய மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - | ஊவா மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - | சப்பிரகமுவ மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - | காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| ஊவா மாகாணம் | - | காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - | காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - | நானாவித காணி அறிவித்தல்கள் | 50 |


**கவனிக்க.-** இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2023, பெப்புருவரி 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2023, மாச்சு மாதம் 03ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, பெப்புருவரி மாதம் 17ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


49- B 082427 - 353 (2023/02)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/65940.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : என்சீபீ/பீஎல்சீ/எல் 11/04/பழு/நீகாகு.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மத்தியம நுவரகம் பலாத்த பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 282, பஹலகம கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த சமகிபுர கிராமத்தில் அண்ணளவான நில வரைபட இல. ரீ.எஸ்.பீ.பி. 14பீ இனால் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இல. 01 இனது 02 ஏக்கர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை காணிகள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான நிறுவன நடவடிக்கைகளின் பொருட்டு திருமதி சாரங்கி கலைக் கலைஞர் நிறுவனத்தின் பொருட்டு நீண்ட காலக் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அபயராஜகம வீட்டுத் திட்டம் அமைந்துள்ள இடம்;
கிழக்கு : பிரதான பாதை ஒதுக்கம்;
தெற்கு : இடைப்பாதை ஒதுக்கம்;
மேற்கு : அரச காணி.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது வருடங்கள் (30) (2022.04.01ஆந் திகதியிலிருந்து முப்பது வருடங்களுக்கு) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2022 ஆம் ஆண்டில் காணியின் அதிகரிக்கப்படாத மதிப்பீட்டுப் பெறுமதியின் 1/2 % ஆகும்.

***தவணைக் கட்டணம்:*** வருடாந்தக் குத்தகைப் பணத்தின் மூன்று மடங்கு.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை கலாசார நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது.;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்ளத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.04.01 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு வழங்கப்படகூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

டீ.டீ.நவோதயா சீ. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.01.31.

02- 120

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/69927.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : என்சீபீ/பீஎல்சீ/எல் 5/கேஜீடீ/04/2021/2022 .

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 223, கோணமருவெவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நெலுகொல்லாகட எனும் கிராமத்தில் அமைந்துள்ள 1345 இறுதி கிராம வரைபடத்தில் துண்டு

இல. 34 இல் ஒரு பகுதியை காட்டுவதற்காக தயரிக்கப்பட்ட வரைபட இல. 62 இல் துண்டு இல. 02 இல் காட்டப்பட்ட 03 ஏக்கர், 01 றூட், விஸ்தீரணமுள்ள அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக அப்துல் காசிம்கே நலீம்தீன் எனும் பெயரில் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : கே.எம். இஸ்மாயில்வின் மற்றும் சரீபுவின் காணி;
கிழக்கு : சேகு முஹம்மதுவின் வயற் காணி;
தெற்கு : பிரவேசிக்கும்வீதி, அஸ்லிவின் காணி மற்றும் நூர்தீனின் காணி ;
மேற்கு : ரத்மல்கஹவெவ பிரதான வீதி.

03. குறித்த காணியினை கோரியிருக்கும் தேவைக்கு குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியினை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது வருடங்கள் (30) (2022.12.13ஆந் திகதியிலிருந்து முப்பது வருடங்கள் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2022 ஆம் வருடத்திற்கான காணியின் விலைமதிப்பீடு பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டுக்கான காணியின் விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000.) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாக செலுத்தப்படல் வேண்டும்.

***தவணைக் கட்டணம்:*** அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரினால் இக்காணியினைவர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள/கட்டப்பட்ட கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடிவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.12.13 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை உரிமை மாறல் அல்லது காணி கீழ்க்குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும். வரி செலுத்துவதைத் தொடராத பட்சத்தில் நிலுவைத் தொகைக்கு 10% அபராத வட்டி விதிக்கப்படும்;

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பாதுவிடின் கோரிக்கையின்படி இக் குத்தகை வழங்கப்படும்.

டி.டி. நவோதயா சீ. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.01.31.

02- 121

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/70310.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : SPLC/ MAT/ 4/ 24/3/91.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

மாத்தறை மாவட்டம்,கொட்டபொல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான மெதேரிபிட்டிய கிராம அலுவலர் பிரிவின் தொம்பகொட என்னும் கிராமத்தின் எப்.வீ.பீ. இலக்கம் 121 இன் தாள் இலக்கம் 03 இன் துண்டு இலக்கம் 57 மற்றும் 60 இல் காட்டப்பட்டுள்ளவாறு 02 ஏக்கர் 4 பேர்ச் அளவுடைய அரச காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு

திருமதி எலீசா மயன்கா ஹோமஸ் என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : எப்.வீ.பீ. 121 இன் துண்டு இலக்கம் 33,56;
கிழக்கு : எப்.வீ.பீ. 121 இன் துண்டு இலக்கம் 58,59;
தெற்கு : எப்.வீ.பீ. 121 இன் துண்டு இலக்கம் 8A,33;
மேற்கு : எப்.வீ.பீ. 121 இன் துண்டு இலக்கம் 33.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2022.11.30ஆந் திகதியிலிருந்து 2052.11.29 வரை ) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000.000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் மாறுபடாத பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் மாறுபடாத பெறுமதியின் 4 % ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தகைளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.11.30 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம்.எச்.ஏ.டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.01.04.

02- 186

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/62854.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : LC/ Ham/ L2/ T/ LTL/40.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டம், தங்கல்லை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான நெட்டோல்பிட்டிய வடக்கு கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த நெட்டொல்பிட்டிய கிராமத்தின் நில வரைபட இலக்கம் 322, காணிப்பிரிவிடல் இலக்கம் 552 இன் மூலம் காட்டப்பட்டுள்ள 0.038 ஹெக்டயார் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு மகளிர் அபிவிருத்தி மகா சபை மூலம் குத்தகைக்குப் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 550 மற்றும் 529;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 529 , 537 மற்றும் 538;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 538;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 551, 550.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** ஐந்து வருடங்கள் (கௌரவ அமைச்சர் அவர்கள் குத்தகையை அனுமதித்த 2022.01.21 ஆந் திகதி முதல் ) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.-** பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

**தவணைக் கட்டணம்:** அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் குத்தகையாளரின் மூலம் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை சங்க நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தகைளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) கௌரவ அமைச்சர் குத்தகையை அனுமதித்த 2022.01.21ஆந் திகதியிலிருந்து துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. மேற்படி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

S.V.A.D. இஷாரா எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.01.12.

02- 187